Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

தமிழ் குரல் மக்கள்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkurall@gmil.com
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

RS Polyclinic
OUR ESTEEMED DOCTORS
Dr M. Rajkumar
MBBS MS DNB MCH (Vascular)
984 10 25996
Sr Vascular Surgeon
Dr K. Namitha Bhuvaneswari
MS (Ophthal) DO MBB
944 4 255784
Sr Eye Surgeon
Dr Sathish Rajkumar
MBBS MS DNB
944 5 401793
Laparoscopic & Laser Surgeon
Dr Shanthi R
MBBS MS MCH (Vascular)
988 4 650945
Sr Vascular Surgeon
Dr Salins R
MBBS MD
877 80 87742
General Physician
Dr Praveena E
MBBS MS (ENT)
994 4 100443
Sr ENT Surgeon

தொகுதி - 6 | நாளிதழ் | 6 பக்கங்கள் | சென்னை, 25 நவம்பர் 2026 | ரூ.2/- | இதழ் - 136

57-வது இந்திய சர்வதேச திரைப்பட விழா:

சென்னை – 25 நவம்பர், 2026 கோவாவில் நடைபெற்று வரும் 57- வது இந்திய சர்வதேசத் திரைப்பட விழாவின் 'இந்தியன் பனோரமா' பிரிவில் திரையிடப்பட்ட 'ஆதி அனந்த்' மராத்தித் திரைப்படம் குறித்த படைப்புப் பயணத்தை இயக்குநர் மகேஷ் லிமாயே பகிர்ந்து கொண்டார்.

பத்திரிகை தகவல் அலுவலகம் ஏற்பாடு செய்திருந்த செய்தியாளர் சந்திப்பில் அவர் பேசினார்.

137 நிமிடங்கள் கொண்ட இப்படம், வளர்ந்து வரும் இளம் நடிகர் ஆதித்யா மற்றும் அவரது துடிப்பான தாத்தா அனந்த் ராவ் (பத்மஸ்ரீ விருது பெற்ற மூத்த நடிகர் அசோக் சரஃப்) இடையிலான உறவைப் பேசுகிறது. விபத்துக்குப் பிறகு அனந்த் ராவ் படுக்கையில் வீழும்போது, நடிப்புத் துறைக் கனவுகளுக்கும் பராமரிப்புப் பொறுப்புகளுக்கும் இடையே ஆதித்யா எதிர்கொள்ளும் சவால்களை இப்படம் விவரிக்கிறது.

ராகுல் தேஷ்பாண்டே பாடியுள்ள பஜனைப் பாடல் மற்றும் அசோக் சரஃபின் தபேலா வாசிப்பு குறித்து மகேஷ் லிமாயே பாராட்டினார். 'ஆதி' (தொடக்கம்) மற்றும் 'அனந்த்' (காலத்தால் அழியாதது) என்ற தலைப்பு, தலைமுறை கடந்த உறவுகளைக் குறிப்பதாக அவர் கூறினார்.

இச்செய்தியாளர் சந்திப்பை ஷிவ்ராஜ் கங்வால் நெறிப்படுத்தினார்.